
---


தாயுமானவரின்
ஆன்மீகச் சிந்தனைகள்
ராஜம் பதிப்பகம்
இணையதளத்தில்
banukumar.in

# தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்.

**ஆன்மிகம்** என்பது நமது அன்றாட வாழ்க்கையை ஆனந்தமாக கொண்டாடி மகிழும் கலை ஆகும்.

ஆன்மிகம் என்னும் வார்த்தையை பிரித்தெழுதினால்,

ஆன்மிகம் = ஆன்மா + இகம்

இங்கு ***ஆன்மா*** என்பது மனநிறைவை குறிக்கும் சொல்லாகும். ***இகம்*** என்பது இம்மை/இவ்வுலக வாழ்வை குறிக்கும் சொல்லாகும்.

மனநிறைவான வாழ்க்கையை எப்படி வாழ்வது என தெரிந்து கொண்டு அதன்படி வாழ்பவது ஆன்மீகம் ஆகும்.

ஆண்டவன் அறிவு மயமானவன், ஆன்மாவும் அறிவுமயமானது. ஆண்டவன் அருள் இருப்பின் தியானத்தினால் மனம் ஒன்றித் தர்மபூதி ஞானம் மலர்ந்து ஆன்மா ஆண்டவனையே காணும் ஆற்றலைப் பெறும்.

---

ஞானிகள் இந்த ஆற்றலைப் பெற்றிருந்தனர். அவர்கள் கால எல்லையையும், கால தத்துவத்தையும் கடந்து நடந்தவற்றையும், நடக்கப் போவததையும் அறிந்து கூறும் ஆற்றல் பெற்றிருந்தனர்.

அறிஞர்கள் ஆளில்லாத பயணங்களை மேற்கொண்டு வெற்றி கண்டனர். அதற்கு, இந்தத் தர்மபூத ஞானம் அவர்களுக்குத் துணைபுரிந்தது.

இந்த தர்மபூத ஞானத்தால்தான் விஞ்ஞானத்தை மெய்ஞ்ஞானமாகவும், மெய்ஞ்ஞானததை விஞ்ஞானமுமாகக் காண்கிறோம். அந்த வயைில் தாயுமானவர் குறிப்பிடம் ஆன்மீகச் சிந்தைனைகளை நாம் சிந்திப்போம்.

## பிரபஞ்சப் படைப்பில் இறைவன்.

அணுவின் அமைப்பும், அண்டங்களின் அமைப்பும ஒரே அமைப்பாக உள்ளன என்று அறிவியலறிஞர்கள் நீரூபித்து உள்ளனர்.

இவர்கள் கண்ட உண்மையே நம்நாட்டு ஆன்மீகப் பெரியோர்கள் உள்ளுணர்வால் அனுபவமாகக் கண்டுள்ளனர்.

பூக்கள் சேர்ந்து பூமாலையாதல் போல, அணுக்கள் சேர்ந்து அண்டமாகின்றன. பழங்காலத்தில் இதுவே “அசித்து” என்ற வைணவ தத்துவம். அசித்து என்பது அறிவில்லாத பொருள் என்று சொல்லுவர். இது சிவபெருமானுடைய உடலாக இருப்பது.

“திடவிசும்பு எரிவளி

நீர்நிலம் இவைமிசை

படர்பொருள் முழுவதுமாய்

---

அவையவை தொறும்

கடன்மிசை உயிரெனக்

கரந்தெங்கும பரந்துளன்"

என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழி இதனை விளக்குகிறது.

அண்டத்தின்கண்- ஞானிகள் பலர் அவதரித்து --நல்மார்க்கங்களைப் போதித்துச் சென்றிருக்கின்றனர். அவர்களுள் ஒருவரே -பிரபஞ்சத் தத்துவத்தை --ஆன்மீகத்தின் வழி --தெளிவுறச் செய்தவர்- நமது தாயுமானவர் ஆவார்.

ஆன்மீக உணர்வை–வெகுவாக-- விரவிக் கலக்காமல்,-- அறிவாற்றலின் அடிப்படையில்–படைக்கப்பட்ட பாடல்களே-- பரிபூரணானந்தம் ஆகும்.

பிரபஞ்சப் படைப்பில் அணு, பிண்டம், அண்டம் என்பதற்கு தாயமானவர் பராபரக்கண்ணியில் விளக்கமாக பதிவு செய்துள்ளார். (பராபரக்கண்ணி பாடல்கள் எண்.113, 114, 117, 118, 133, 226, 279)

"பார்அறியாது அண்டப் பரப்புஅறியாது உண்பெருமை

யார்அறிவார் நானோ அறிவேன் பராபரமே" (பராபர. 358)

"அண்டம் அனைத்திலுமாய் அப்பாலுக்கு அப்பாலும்

கொண்ட நின்னை யார் அறிந்து கொள்வார் பராபரமே" (பராபர. 359)

"பார்க்கின் அண்டபிண்டப் பரப்புஅனைத்தும் நின்செயலே

யார்க்கும் செயல்இலையே ஐயா பராபரமே" (பராபர. 360)

"ஒன்றே பலவே உருவே அருவேயோ

என்றே அழைப்பது உன்னை என்றோ பராபரமே" (பராபர. 361)

"எண்திசைக்கீழ் மேலான எல்லாம் பெருவெளியாக்

கண்டஇடத்து என்னையும்நான் கண்டேன் பராபரமே" (பராபர. 362)

"அகத்தூடு அணுஅணுவாய் அண்டம்எல்லாம் தானாய்

மகத்துஆகி நின்றனைநீ வாழி பராபரமே" (பராபர. 228)

"அண்டம்பிண்டம் காணேன் அகமும் புறமும் ஒன்றாய்

எண்ணடஎன்னை நீகலந்த காலம் பராபரமே" (பராபர. 279)

## மனிதனுக்கு அவசியமானது ஆன்மீகம்

அத்வைதம் பற்றிப் பொதுவாக நோக்குபவர்களுக்கு அது உயிர்கள், உலகு என்பவற்றை மறுத்து பிரம்மம் என்னும் ஒரு பொருளின் உண்மை பேசும் தத்துவம் என்ற தோற்றமே புலப்படும். தோற்றம் என்பது அனைத்தையும் நேசித்தல் என்ற அன்புணர்வு ஆகும்.

"எல்லா உயிர்களையும் ஆத்மாவிலும் ஆத்மாவை எல்லா உயிர்களிலும் தரிசித்தல் என்ற வகையில் "ஈஸாவாஸ்ய" உபநிடத சிந்தனையைக் கொள்ளலாம்.

உண்மைப் பொருள் பற்றிய தேடல், சமூக அக்கறை, சுழல்சார் அக்கறை என்பதைச் சார்ந்த அன்புநிலை ஆகிய பிரம்மம் என்ற நேர்க்கோட்டில் சந்திக்கிறது என்று வேதாத்திரி மகரிசி குறிப்பிடுகிறார்.

இன - மொழி, சமய - பழக்கவழக்க வேறுபாடுகள் கொண்ட இந்திய மண்ணுக்குப் பொருத்தமானதும் அவசியமானதும் ஆன்மீகம் ஆகும்.

## தாயுமானவரின் அருள் பணி.

தாயுமானவர் தம்முடைய முயற்சியால் ஒழுக்கம், அறம் ஆகியவற்றைக் காத்து ஞானநிலையைத் தன்னுடைய உள்ளுணர்வால் உணர்ந்து கொண்டார்.

தன்னுடைய வரலாற்றையே மற்றவர்களுக்கு பயன்படும்படியாக பாடல்கைளைப் பாடினார்.

இன்பம், துன்பம் என்ற நிலையைக் கடந்து, எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற கொள்கையுடன் மானுடப் பணி செய்வதே தமது அருள் பணியாகக் கொண்டார்.

சாதகன் எவ்வாறு அருள்தாகம் கொண்டு இருக்க வேண்டும் என்பதை தமது அருள்பணியாகச் செய்தார்.

அருள்தாகம் எவ்வாறு அமையவேண்டும் என்பதை தன்னுடைய நிலைமைகளை எடுத்துச்சொல்லுகிறார்.

அருள்தாகம் பற்றி தாயுமானவர் பராபரக்கண்ணியில் "அருள்தாகம் - தன்நிலை கூறல்" என்ற தலைப்பில் 27 பாடல்களில் 54 வரிகளில் பாடியுள்ளார்.

பராபரக்கண்ணி பாடல்கள் எண். 20, 25, 30, 35, 36, 40, 41, 45, 50, 51, 55, 220, 235, 246, 260, 263, 264, 266, 270, 280, 287, 334, 340, 341, 344, 360, 361)

---

"ஈனம் தரும்உடலம் என்னதுயான் என்பதுஅற

ஆனந்தம் வேண்டி அலைந்தேன் பராபரமே" (பராபர.118)

"ஏதும் தெரியா எளியேனை வாஎனநின்

போதநிலை காட்டின்பொறாதோ பராபரமே" (பராபர.343)

- எலும்பு உருகி, மனம் இளகிக் கரைந்து கரைந்து, அன்பே உருவமாய் நிற்க, அலைந்து வருந்தினேன்.
- அப்பா! வறுமைக் காலத்தில் உதவ சேமித்து வைத்த பொருளே! பொறுக்க முடியாதவனாய் இருக்கிறேன். போற்றி! என்று சொல்வதைத் தவிர, வேற என்னால் என்ன செய்ய முடியும்?
- ஐயோ! உனைப் பிரிந்தவர் உள்ளம், நெருப்பில் பட்ட சர்க்கரைப் பாகோ? மெழுகோ? சொல்லுவாயாக!
- அறிவிலியாகிய இந்த ஏழையின் மனம், நினைக்கக் கூடாதவற்றை எல்லாம் நினைத்து, புண் ஆகிப் போனது. அந்த நிலை இனிப் போதும். (இனிமேலும் தொடர வேண்டாம்.)
- உன் அடிமையாகிய நான், கடலில் விழுந்த துரும்பு போல அங்கும் இங்கும் வீணில் திரிந்து அலைவது என்ன பாவமோ?
- சூதும் பொய்யும் உள்ளே வைத்து, பொறாமை கொண்டு, பிதற்றும் மனம் உடைய எனக்கு, உய்வு பெற ஒரு வழி தான் உண்டோ?
- மும்மலக் குற்றங்களில் இருந்து விடுபட்டு நின்றவன் போல் நடித்தேன். ஆனாலும் அதனால் மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டேன். இது முறையாகுமோ?
- இப்பொழுது நீ சிறிதும் இரக்கம் காட்டவில்லை என்றால், எமன் வரும் அந்த வேளையில். என்னைக் காப்பாற்ற வல்லவர் யார் உளர்? நீயே காண்பாயாக!

- சொல்லும் அதற்குரிய பொருளும் அற்று, இரவும் பகலும் என எந்நேரமும், மௌனமாய் இருப்பதற்கே எனக்கு விருப்பம் பிறக்கிறது.
- அன்புடன் கூடிய வேறுபாடற்ற நிருவிகற்ப நிட்டை கூடுவது அல்லால், உன் அடிமையாகிய எனக்கு, வெறு விருப்பம் உண்டோ? இது நீ அறியாத உண்மை அல்லவே.
- எம் தந்தையே! நின்னுடைய திருவருளைப் பெற பேதையாகிய நான் பெரும் பித்துக் கொண்டேன். இனி எதைக் கொண்டு என் பிழைப்பை நடத்துவது?
- எனது உள்ளப் பாங்கினை அறியாது, ஒருவர் ஒன்று குறித்து, கற்பனை செய்து பேசினால், ஐயகோ! இளங்கன்றுக் குட்டிப்போல துள்ளித் துடிதுடித்துப் போவேன்..
- நீர்போல் உள்ளம் கசிந்து உருக, பெருமூச்சு விட்டு நின்ற என்னை ஏறெடுத்துப் பாராதது ஏன் என்று கூறுவாயாக!
- தொடக்கு காலத்தில் அடியேனை ஆட்கொண்டு அருள்செய்துவிட்டு. இப்பொழுது. "நீ போய்விடு!" என்று கூறினால், நான் எங்கே போவேன்.
- நீண்ட காலமாக அலைந்து பட்ட நடுக்கம் எல்லாம் தீருமாறு உனக்கு அடிமைப்பட்டேன். அவ்வாறு அடிமைப்பட்ட பிறகும், அடியேன் துன்பப்படுதல் நியாயமோ?
- ஐயா! பாவியாகிய நான் படுகின்ற துன்பம் அனைத்தையும் பார்த்திருந்தும், இரக்கம் காட்டாது இருந்தால், என் உயிருக்கு உற்ற துணையாவார் யாருளர்?
- உன்னை நான் சரணடைந்தலால், நீதானே என்னைக் காப்பாற்ற வேண்டும். அதனைத் தவிர்த்து, என்னைத் தனியே விடுதலர் என்ன நியாயம்?
- என்னை விட்டு நீங்காத துன்பங்கள் குறித்து உன்னிடம் வந்து சொன்னால், நினது திருச்செவியில் அது ஏறுவது இல்லையே! அது ஏன்? சொல்லுவாயாக!

---

- நின்மீது அன்புடையோர் அருந்தி மகிழும் மேலான இன்பத்தை, யான் அருந்தி மகிழ, இன்னும் எத்தனை நாள் ஆகும்? கூறுவாயாக!
- எத்தனை கோடி முறை என் குறைகளை எடுத்து எடுத்து தேவரீர் முன்பு கூறினாலும், தங்களது சித்தம் இரக்கம் காட்டவில்லையே! இதற்கு நான் என்ன செய்வேன்?
- என் செயலால் ஆகப் போவது ஒன்றும் இல்லை. அவ்வாறிருக்க பாவியாகிய நான், “எல்லாம் நின் செயல்! என்னும் நினைவு கொள்ளர், இருப்பது ஏன்?
- மெய்ப்பொருள் உண்மையை, உள்ளது உள்ளபடி உணராத, பெரும்பாவி என்பதாலோ, மெள்ள மெள்ள என்னைக் கைவிட்டு விட்டாய்?
- என்னதான் நான், எனது குறைகளை பலமுறை ஓதினாலும், ஓர் எள்அளவு கூட மனம் இரங்கா வஞ்சனை உனக்கு எங்கிருந்து வந்தது? வெளிப்படையாக எடுத்துரைப்பாயாகா!
- கண்ணீர் சோரவும், உடல் நடுக்கம் கொள்ளவுமாக நின்று, உன்னைப் பற்றி கற்பனையாக நான் பாடிக் கொண்டிருக்கிறேன். உன்னை நான் கனவில்கூட கண்டதில்லை. இதற்கு நான் என்ன சொல்லுவேன்?
- இந்த உலகநடை எதனையும் அறியாமல், அனைத்திலிருந்தும் பற்று விட்டு நிற்கும் எனக்கு, உனது தெய்வத் திருவருளைத் தராது இருக்க, அது தகுதி உடைய செயலா?
- நினது திருவடியாக விளங்கும் உமது திருவருளையே எப்பொழுதும் தேடிக் கொண்டிருப்பேன். தேடும் முன்பே கிடைத்துவிட்டால், மகிழ்ச்சியால், இன்பக் கூத்து ஆடுவேன். பேரின்பமயமாய் மாறிவிடுவேன்.
- அகத்தவம் எனப்படும் தியானம் செய்வதால் உள்ளம் உருகவும். உடல் இளைக்கவும், மனத்தில் இருந்த வஞ்சனை நீங்கவும், ஆக இவை நிகழ்வதை எப்பொழுது காணப் போகிறேன்?

---

- இழிவைச் செய்யும் உடலை யான் என்றும், ஏனைய பொருள்களை எனது என்றும், கொண்ட நினைப்பு அற, பேரின்பம் வேண்டி அலைந்து வருந்தினேன்.

ஆன்மீகத்தை உணர வேண்டுமானால், இறையுணர்வு பெற வேண்டுமானால் சாதகன் அருள் தாகம் கொண்டிருக்க வேண்டும் என்பதை தாயமானவர் வலியுறுத்துகிறார்.

## ஆன்மீக இனிமை

மனித உயிர் தனது விரைவான சுழலியக்கத்தால் உற்பத்தி செய்து கொண்டிருக்கும சீவகாந்தத்தின் மதிப்பு.

அதனுடைய அற்புதமான இயக்கங்கள், விளைவுகள். இதன் மூலம் அறிவானது எவ்வாறு உடல் வரையில் பரவி இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் எனும் நான்கு வகையாக மலர்கின்றன என்ற உண்மையையும், இதை முறைப்படுத்தி ஆளும் சீர்மையால் எவ்வாறு மனிதன் வாழக்கயின் நோக்கங்களை நிறைவு செய்து கொள்ள முடியும் என்ற அனுபவ அறிவையும் அனைவரும் பெற வழி செய்ய வேண்டும்.

# தத்துவம்

"அருளால் எவையும் பார் என்றான் - அதை

அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்தேன்

இருளான பொருள்கண்ட தல்லால் - கண்ட

---

என்னையும் கண்டிலேன் என்னடி தோழி?" (ஆனந்தக்களிப்பு.13)

தோழி! திருவருளின் துணைகொண்டு எல்லாவற்றையும் சிவமாகவே பார்க்குமாறு கூறினான்.

ஆனால் நானோ, அவற்றை எனது சுட்டறிவால் கண்டேன். அப்பொழுது இருளாய் விளங்கும் பொருளைக் கண்டேன்.

அது தவிர அவ்விருளைக் கண்ட என்னையும நான் காண முடியவில்லை. இது என்ன அதிசயமோ!

உலகில் உள்ள பொருள்களை இறைவனது அறிவால், அருளால் பார் என்றார் குருநாதர். இதன் உண்மை புரியாமல் என்னுடைய அறிவால் உலகத்தைப் பார்த்தேன்.

அவ்வாறு பார்த்தபோது இருளைத்தான் பார்த்தேன். அதுமட்டுமல்ல என்னையும் நான் பார்க்கவில்லை. இது என்ன விந்தையடி தோழி!

அவரவர்கள் அவர்களது அறிவைக் கொண்டு இவ்வுலகைப் பார்க்கிறார்கள். மகாபாரதத்தில் கண்ணன், துரியோதனனை நோக்கி "உலகில் ஒரு நல்லவரைப் பார்த்து வா" என்றார்.

பின்பு தருமரை பார்த்து "உலகில் ஒரு கெட்டவரைப் பார்த்து வா?" என்றார்.

"உலகில் ஒருவர் கூட நல்லவர் இல்லை" என்றான் துரியோதனன். "உலகில் ஒருவர்கூட கெட்டவர் இல்லை" என்றான் தருமன்.

## அருளால் எவையும்பார் என்றான்

---

பஞ்சேந்திரியங்கள் கொண்டு உலகைப் பார்ப்பவர்கள் மருள் நிலையை அடைகின்றார்கள். பஞ்சேந்திரயங்களைக் கொண்டு இறைவனை வழிபடுபவர்கள் அருள் நிலையை அடைகிறார்கள்.

அருள் நிலையை அடைகின்றவர்கள் அனைத்தையும் இறை சொரூபமாக காண்கின்றனர்.

மருள்நிலைக்கு ஆளாகின்றவர்கள் தங்களிடம் ஜீவபோதத்தை வளர்த்து அக்ஞானத்துக்கு ஆளாகின்றார்கள். மேலும் அவர்கள் சிற்றின்பத்தில் மயங்கிச் சிறுநெறியில் வாழ்கிறார்கள்.

பஞ்சேந்திரியங்களையும் இறைவழிபாட்டில் ஈடுபடுத்தி அருள்நிலையைத் தம்மிடத்தல் உண்டாக்கியவர் இராமகிருஷ்ணர்.

அவர் வாழ்வு அருள் வாழ்வுக்கு விளக்கமாக அமைகின்றது. பஞ்சேந்திரியங்கள் மூலமாக அவர் அனுபவித்தது பாரமார்த்திக இன்பமேயாகும்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ஒரு சமயம் அவர் வயல் வழியாகப் போய்க் கொண்டிருந்தபொழுது பசுமையான வயலுக்கு மேல் வெண்மையான கொக்குக் கூட்டம் பறந்து சென்றது.

அதற்கு மேல் வானில் கருமையான மேகக்கூட்டம் படர்ந்திருந்தது. பசுமை, வெண்மை, கருமை ஆகிய மூன்று வர்ணங்களையும் ஏக காலத்தில் பார்க்கும் பொழுது இயற்கையின் பேரழகு அவருடைய உள்ளத்தை அருள் நிலைக்கு எடுத்துச் சென்று விட்டது.

---

மற்றொரு சமயம் அவர் மேனியின் மீது சிவசின்னங்களை அணிந்து அவருக்குச் சிவ வேடமணிந்த பொழுது அவருடைய உள்ளம் சிவசொரூபத்தில் லயமாகிப் பேரின்பத்தில் திளைத்திருந்தது.

தெய்வப் பிரசாதத்தை அவர் வாயில் போட்டால் அவர் உள்ளம் அதீத நிலைக்குப் போய் விடும்.

விவேகானந்தர் தெய்வீகப் பாடல்களை இராமகிருஷ்ணர் முன் பாடினால் அதைக் கேட்கும் பொழுது அவர் உள்ளம் அதீத நிலைக்குப் போய்விடும்.

நறுமணத்தைப அவர் நாசியின் மூலம் சுவாசிக்கும் பொழுது அவருடைய உள்ளம் அருள் நிலைக்குப் போய்விடும்.
பஞ்சேந்திரியங்கள் மூலம் அவர் பர தரிசனத்தையே பெற்று வந்தார்.

அருள்குரு இத்தகைய தெய்வீகக் காட்சியைக் காண்பதற்குரிய உபதேசத்தைச் செய்கிறார்.

ஆனால் அருளுக்குப் பா்திரமாகாதவர்கள் தங்கள் அறிவைக் கொண்டு உலகைக் காண்கிறார்கள்.

அறிவைக் கொண்டு உலகைப் பலப்படுத்தும் பொழுது நம்மிடத்தில் ஜீவபோதம் வளர்கின்றது.

ஜீவ போத்திலிருந்து ஆசை, ஆணவம், அகங்காரம் ஆகியவைகள் தோனறி நம் அறிவை மயக்குகின்றன.

அருள் நிலையில் பார்க்கும் பொழுது தெய்மாகத் தோன்றுகின்ற ஒன்று அறிவைக் கொண்டு பார்க்கும் பொழுது உலகமாகத் தென்படுகிறது.

இதைத்தான் "அருளால் எவையும் பார் என்றான் - அத்தை அறியாதே சுட்டி என் அறிவாலே பார்த்ததேன்" என்றார் தாயுமானவர் குறிப்பிடுகின்றார்.

## இருள்ஆன பொருள்கண்டது அல்லால்-

இருட்டில் எந்தப் பொருளையும் நாம் காணமுடியாது. இருளில் நம் உடலையும் காணமுடியாது.

அக்ஞானத்தல் இருக்கும் மனிதன் இறைவனையும் காணமுடியாது. தன் உண்மையான சொரூபத்தையும் காணமுடியாது.

நாம் பெற்றுள்ள அறிவு மெய்பொருளைக் காணவோ, நம் நிஜசொரூபத்தைக் காணவோ பயன்படுவதில்லை.

உலகைப் பற்றியும் உலகின் ஜடத்தன்மையைப் பற்றியும் அறிவைக் கொண்டு ஆராய்ந்து வருகின்றோம்.

ஆனால் உண்மைப் பொருளை நாம் அறிய முடிவதில்லை. இருட்டறையில் பொருள் இருந்தாலும் அது நம் கண்களுக்குப் புலப்படுவதில்லை.

அதே போன்று அக்ஞானத்தில் இருக்கின்ற நமக்கு இறைவன் தென்பட்டுக் கொண்டிருந்தாலும் அவரை நாம் காண முடியாது.

புறப்பொருள்களைக் காண்பதற்கு நம் கண்கள் பயன்படுகிறது. ஆனால் நம் கண்களைக் கொண்டே நம் கண்களைப் பார்க்க முடியாது.

---

அதுபோன்று பேரறிவுப் பொருளிடமிருந்து வந்த அறிவைக் கொண்டு மற்றவற்றை அறிகின்றோம். ஆனால் அவ்வறிவினால் நம்மமை அறிய முடிவதில்லை.

மாசற்ற மனத்தில் தோன்றும் அறிவைக் கொண்டுதான் இறைவனையும், நம் நிஜசொரூபத்தையும் காண முடியும்.

குருவின் அருளாலும் தூயவாழ்வாலும் அப் பேரறிவை நாம் பெற முடியும். உலக வாழ்வில உழன்று ஜீவபோதத்தை வளர்த்து வருகின்ற மக்கள் இறைவனையோ தங்களுடைய நிஜ சொரூபத்தையோ காணமாட்டார்கள்.

இயற்கையின் ஆரம்பநிலையே பிரம்மம், தெய்வம் என்பது ஆகும். அந்தத் தெய்வத்தின் இயக்க நிலை உலகம், உயிர் என்பதாகும்.

இயற்கையின் உணர்வு நிலை அறிவு ஆகும். இம் மூன்றையும பிரித்துப் பேசுவது சித்தாந்தம் ஆகும்.

இயற்கை என்பதே அனைத்துக்கும் மூல காரணம். இயற்கைதான் எல்லாமே என்று எடுத்துரைப்பது வேதாந்தம்.

இவை இரண்டும் வேறுவேறு அல்ல. நான் யார் என்று எண்ணுபவர்களுக்கு இரண்டும் ஒன்றுதான் என்ற உண்மை புலப்படும்.

இறைவன் மீது பக்தியோடு இருந்தால் முக்தி நிலையை அடையலாம் என்பர்.

இனம், மொழி. சமய. பழக்க வழக்க வேறுபாடுகள் கொண்ட இந்திய மண்ணுக்குப் பொருத்தமானதும் அவசியமானதும் ஆன்மீகம் என்று ஆன்மீகத்தை மிகவும் வலியுறுத்துகின்றார்.

இயற்கையிலிருந்து அனைத்தும் தோன்றுகிறது என்பது தாயுமானவரின் கருத்தாகும். பற்றற்ற வாழ்வை மேற்கொண்டால் இன்பமாக வாழலாம் எனபது இவருடைய கோட்பாடாகும்.

உடலிலும் உள்ளத்திலும் அருளுடனும், அன்புடனும் வாழும் வாழ்க்கை ஆன்மீக வாழ்க்கை எனப்படும்.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பது இவருடைய கொள்கையாகும். அதையே நாமும் போற்றுவோம்.

இறைவனே! ஆனந்தத்தின் மொத்த வடிவம். ஆனந்தம் பெறவே உயிர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

உழைப்பதும், உண்பதும், ஒருவரை ஒருவர் அன்பு கொண்டு வாழ்வதும எல்லாம் ஆனந்தத்தின் பொருட்டே.

நம்மால் என்றுமே ஆன்தத்தை விடுத்து வாழவே முடியாது. எங்கும் ஆனந்தமே. எதிலும் ஆனந்தமே!

இதற்காகவே, இறைவனும் சிற்சபையில் ஆனந்த நடனமிடுபவனாக இருக்கிறான்.

இறைவன்எல்லா திசைகளிலும் நிறைந்திருக்கிறான். நம் இதயத்தாமரையாகிய மனத்தில் தேனாக இருந்து தித்திக்கும் இனிமை உடையவன் இறைவன்.

அவனையே எப்போதும் சிந்திப்போமாக! பொருளின் மீது நாட்டம் கொண்டவனுக்கு அருட்செல்வம் என்றும் எட்டாக் கனியாகும்.

---

திருவோட்டையும், செலமாகிய நிதியையும் ஒன்று போல காணும் உத்தமர்களின் நெஞ்சத்தை தன் இருப்பிடமாக கொண்டிருப்பவன் இறைவன்.

குழந்தையின் மனதில் தான் என்னும் அகங்காரம் இல்லை. இவர் நல்லவர், கெட்டவர். வேண்டியவர், வேண்டாதவர் என்ற பேதங்கள் தெரிவதில்லை.

மனிதனும் குழந்தை போல வெள்ளை உள்ளம் கொண்டால் அவனே ஞானியாவான். வாழ்வில் எத்தயை துன்பம் நேர்ந்தாலும் மனம எதைப் பற்றியும் கவலை கொள்ளாது கடவுளின் திருவடிகளையே வழிபட வேண்டும்.

---